**செய்தி வெளியீடு எண்: 569** **நாள்:04.09.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டம் மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது :-

மாநில அளவில் செயல்படும் மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம், தோட்டத் தொழிலாளர் ஆலோசனை வாரியம், குறைந்தபட்ச ஊதிய ஆலோசனை வாரியம் போன்ற முத்தரப்புக் குழுக்களும், தொழிலாளர் சட்டங்களிலும், நடைமுறைகளிலும் ஏற்படும் இடர்பாடுகளையும், பிரச்சினைகளையும் களைய உரிய முறையில் விவாதித்து அவைகளுக்கு நல்லமுறையில் தீர்வு கண்டு வருகிறது. முத்தரப்புக் குழுக்கள் (Tripartite Consultative Mechanism) மூலம் தொழிலாளர்களின் பிரச்சினைகளில் தீர்வு காண்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

இவ்வாரியமனாது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தலைவராகவும் மற்றும் அரசு தரப்பு பிரதிநிதிகள், வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர் தரப்பிலிருந்து தலா ஆறு பிரதிநிதிகள் மற்றும் நான்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (ஒரு பெண் உறுப்பினர் உள்பட) ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு செயல்படும் மாநில அளவிலான ஒரு முத்தரப்பு ஆலோசனை வாரியமாகும். இவ்வாரியத்தின் மூலம் ஆலோசனை பெரும் பொருட்டு தொழிலாளர்கள் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் அரசின் ஆக்கப்பூர்வமான திட்டங்கள் விவாதப் பொருட்களாக எடுத்துக்கொள்ளப்படும். பல்வேறு தொழிலாளர் சட்டங்களில் காலத்திற்கேற்றார் போல் மாற்றங்கள் மேற்கொள்ளுதல் மற்றும் தொழிலாளர்களுக்காக புதிய சட்டங்கள் உருவாக்குதல் போன்றவைகளும் இவ்வாரியத்தில் விவாதப் பொருட்களாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும், தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்போரை பாதிக்க கூடிய முக்கிய பிரச்சனைகளை தீர்த்து வைத்தல், தொழில் அமைதியினை பேணுவதற்கான அறிவுரைகளையும் இவ்வாரியம் வழங்கி வருகிறது.

வேலையளிப்போர் அல்லது தொழிலாளர்களால் எதிர்கொள்ளப்படும் இடர்பாடுகள் மற்றும் பல்வேறு நிறுவனங்கள், தொழில்கள், தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள் ஆகியவைகளின் செயல்பாட்டில் எழக்கூடிய பிரச்சனைகள் ஆகியவற்றினை இவ்வாரியம் விவாதித்து தீர்த்து வைக்கிறது. இதுவரை, 67 கூட்டங்கள் நடத்தப்பட்டு, பல்வேறு முக்கிய பிரச்சனைகளுக்கு இவ்வாரியம் மூலம் தீர்வு காணப்பட்டுள்ளது.

இன்று இவ்வாரிய கூட்டத்தில் நிர்வாக பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் முன்வைத்த 11 விவாத பொருட்கள் வாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவற்றில் ஜவுளி தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் தரவு உள்ளீடு செயல்பாட்டாளார் ( Data Entry Operator ) களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிப்பது தொடர்பாகவும் தொழிற்சங்க பதிவு சான்று தொலைந்து போனால் இதர சான்றுகள் நகல் வழங்குவது தொடர்பாகவும் கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இருக்கை வசதி ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு இனங்களில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு முன்னதாக தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தின் ரூபாய். 9 இலட்சம் மதிப்பில் புரனமைக்கப்பட்ட கூட்டரங்கினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திறந்து வைத்தார்கள்.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கே.எஸ்.விஜயகுமார், திருமதி.எம். சந்திரபிரபா, தொழிலாளர் ஆணையர் முனைவர் இரா. நந்த கோபால்,இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் துறை இணை இயக்குநர் ஆர். கிரிதரன், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் திரு. கா. மனோகரன், கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள் திரு. பா.மு. சரவணன் ,எம். ரவிச்சந்தரன், தொழிலாளர் நல வாரிய செயலாளர் திருமதி. உ. உமாதேவி, தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், வேலையளிப்போரின் பிரதிநிதிகள், தொழிலாளர் துறை கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**